1984 மார்ச் 16]

மீன் பிடிக்க விசைப் படகுகள் அளிக்கும் திட்டம்.

346—(* வினா எண் 18470) திரு. செ. செம்மலை : மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

மீன்பிடி விசைப்படகுகளை அளிக்க வேண்டும் என மத்திய அரசை மாநில அரசு கேட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. கலைமணி : ஆம். அது மைய அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்காக தனியாக திட்டம் ஏதாவது நம் அரசால் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக் கிறதா? அப்படியானால் அந்தத் திட்டத்தினுடைய விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. கலைமணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கண்ணாடி இழை படகுகள் பெறுவதற்கும் வள்ளங்களுக்கு இயந்திர மயமாக்கம் பெறவும் சுமார் 10.5 கோடிக்கான திட்டங்களை நமது அரசு தயாரித்து மைய அரசுக்கு அனுப்பி உள்ளது. அது மைய அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 10.5 கோடி ரூபாய்க்கு இந்த திட்டத்தை உருவாக்கி மைய அரசாங்கத்திற்கு நமது அரசாங்கம் அனுப்பி, அது ஆய்வில் உள்ளதாக சொன்னார்கள். அந்தத் தொகை முழுவதும், நமது அரசு மானியமாக கேட்டுள்ளதா? அல்லது கடனாகக் கேட்டுள்ளதா? என்று அமைச்சர் அவர்கள் அறிவிப் பாரா?

மாண்புமிகு திரு. க. கலைமணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த தொகையில் 50 விழுக்காட்டை மானிய மாகவும், 50 விழுக்காட்டை வங்கிகளின் மூலம் பெறுவதற்காகவும் நாம் மைய அரசிடம் சொல்லியிருக்கிறோம்.

கோடியக்கரையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகம்.

347—(* வினா எண் 20336) திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் கோடியக்கரையில் கட்டி முடிக்கப் பட்ட மீன்பிடித் துறைமுகம் பயன்படுத்தப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இதைச் சீர்படுத்தி மீனவர்களுக்குப் பயன்பட அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?